


16.12. 2024

தலைப்புச் செய்திகள்

- அரசியல் சாசன அமைப்பை பாதுகாப்பதில் பிஜேபி தலைமையிலான அரசு உறுதியுடன் செயலாற்றுவதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மாநிலங்களவையில் தெரிவித்துள்ளார்.
- இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயக்கேவுடன் பிரதமர் திரு.நரேந்திரமோடி புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டார்.
- ராணிப்பேட்டை சிப்காட் தொழிற்பூங்காவில் ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்பிலான காலணி உற்பத்தி தொழிற்சாலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று அடிக்கல் நாட்டினார்.
- தென்கிழக்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- ஆஸ்திரேலியாவிற்கு எதிரான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 51 ரன் எடுத்திருந்தது.

இனி விரிவான செய்திகள்

***********

பிரதமர் இலங்கை அதிபர்

பிரதமர் திரு.நரேந்திரமோடி இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் திரு. அனுர குமார திசநாயக்கேவுடன் புதுதில்லியில் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொண்டார்.
வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு ஒத்துழைப்பு மீனவர் பிரச்சனை உள்ளிட்டவை குறித்து இருதலைவர்களும் விவாதித்தனர்.
முன்னதாக குடியரசு தலைவர் மாளிகையில் இலங்கை அதிபருக்கு இன்று அளிக்கப்பட்ட பாரம்பரிய சிவப்பு கம்பள வரவேற்பு நிகழ்வில் குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பிரதமர் திரு.நரேந்திரமோடி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.
மூன்று நாள் அரசு முறை பயணமாக இந்தியா வந்துள்ள இலங்கை அதிபர் குடியரசு தலைவரையும், குடியரசு துணைத்தலைவரையும் சந்தித்து பேச உள்ளார்.
முதலீடுகள் மற்றும் வர்த்தகம் தொடர்பான சிறப்பு நிகழ்விலும் திரு.திசநாயக்கே பங்கேற்பதோடு பீகாரில் உள்ள புத்த கயாவிற்கும் அவர் செல்கிறார்.

***********

மாநிலங்களவை நிர்மலா சீதாராமன்

அரசியல் அமைப்பு சாசன உணர்வுகளுக்கு மதிப்பளித்து தேச கட்டமைப்பிற்கு உறுதி ஏற்பதற்கான தருணம் இது என்று மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் 75ஆவது ஆண்டு அரசியல் சாசன அமைப்பு மீதான சிறப்பு விவாதத்தில் இன்று உரையாற்றிய அவர் நமது அரசியல் அமைப்பு மிகவும் வலுவானது என்பதை நம் நாட்டு வளர்ச்சியின் அனுபவங்கள் பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார்.

சோதனை நேரங்களிலும் நமது அரசியல் சாசனம் வலிமையாக நிலைபெற்றதை அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

மகளிர் நலன் மற்றும் மகளிருக்கான இட ஒதுக்கீட்டில் பிஜேபி எப்பொழுதுமே அர்ப்பணிப்புடன் திகழ்ந்ததாக கூறிய அவர், இதன்காரணமாகவே மக்களவையிலும், சட்டப்பேரவைகளிலும் மகளிருக்கான இட ஒதுக்கீட்டு சட்டத்தை பிஜேபி நிறைவேற்றியதாக கூறினார்.

பிஜேபி அரசு அரசியல் சாசன அமைப்பை என்றென்றும் பாதுகாப்பதில் உறுதி கொண்டிருப்பதாக கூறிய அவர் பல்வேறு துறைகளில் நரேந்திரமோடி அரசின் சாதனைகளை பட்டியலிட்டார்.

வறுமையை ஒழிப்பதற்கான உறுதியை காங்கிரஸ் செயல்படுத்தவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

மாநிலங்களவை எதிர்கட்சி தலைவர் திரு.மல்லிகார்ஜுன கார்கே பேசுகையில் மத்திய அரசு அரசியல் அமைப்பு சாசனத்தின் மதிப்பை குறைத்துள்ளதாக குறை கூறியுள்ளார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி நாளை மாநிலங்களவையில் இவ்விவாதத்திற்கு பதில் அளிக்கிறார்.

முன்னதாக பிஜேபி, தெலுங்கு தேசம், திரிணாமுல்காங்கிரஸ் கட்சிகளிலிருந்து மாநிலங்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட புதிய உறுப்பினர்கள் இன்று பொறுப்பேற்றுக்கொண்டனர்.

***********

பங்கஜ்சவுத்ரி

சிறு குறு நடுத்தர தொழில்நிறுவனங்கள் பதிவு செய்வதற்கான, உதயம் இணையதளத்தில் ஐந்தரை கோடிக்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளதாக மத்திய நிதித்துறை இணை அமைச்சர் திரு.பங்கஜ்சவுத்ரி தெரிவித்துள்ளார்.

மக்களவையில் இன்று கேள்வி நேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், நம் நாட்டின் பொருளாதார வளர்ச்சி வேகமாக மேம்பட்டு வருவதாக எடுத்துரைத்தார்.

eShram இணையதளத்தில் 30 கோடியே 46 லட்சத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பதிவு செய்திருப்பதாக கூறிய அமைச்சர் 2014-15ஆம் ஆண்டுகளில் வெறும் 15 கோடியே 80 லட்சம் பேர் மட்டுமே அதில் பதிவு செய்திருந்ததாகவும் எடுத்துரைத்தார்.

***********

சுகந்தா மஜுமுதார்

நாட்டில் 21 போலி பல்கலைகழகங்கள் செயல்படுவதாக மத்திய கல்வி இணை அமைச்சர் சுகந்தா மஜுமுதார் தெரிவித்துள்ளார்.

மக்களவையில் துணை கேள்விகளுக்கு பதில் அளித்த அவர் கடந்த 10 ஆண்டுகளில் 12 போலி பல்கலைகழகங்கள் மூடப்பட்டதாகவும், போலி பல்கலைகழகங்களின் பட்டியலை பல்கலைகழக மானிய குழு தொடர்ந்து வெளியிட்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பாக உரிய நடவடிக்கை கோரி மத்திய அரசு மாநில அரசுகளுக்கு கடிதம் எழுதி வருவதாகவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

மாணாக்கரை ஏமாற்றும் இத்தகைய தனிப்பட்ட கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைகழகங்களுக்கு எதிரான முதல் தகவல் அறிக்கை போடப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

***********

விஜய் திவஸ்

1971-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கு எதிரான போரில் இந்திய வீரர்களின் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றியை நினைவு கூறும் விஜய் திவஸ் வெற்றி தினத்தை ஒட்டி தலைவர்கள் வீர அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு வெளியிட்டுள்ள செய்தியில் இந்தியாவிற்கு பெருமைமிகு வெற்றியை தேடி தந்த படை வீரர்களின் வீரம் வரும் தலைமுறையினருக்கு உந்து சக்தியாக திகழும் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

நாட்டின் பாதுகாப்பில் தன்னிகரற்ற துணிச்சலையும், தன்னலமற்ற தியாகத்தையும் புரிந்த படைவீரர்களை தலை வணங்குவதாக குடியரசு துணை தலைவர் திரு.ஜக்தீப்தன்கர் கூறியுள்ளார்.

பாதுகாப்பு படைவீரர்களின் தியாகமும், வீரமும், என்றென்றும் நினைவு கூறப்படும் என்றும், இந்த வெற்றி தேசத்தின் வரலாற்றில் பொறிக்கப்பட்டு வரும் தலைமுறையினருக்கு என்றென்றும் உத்வேகமாக திகழும் என்றும் பிரதமர் திரு.நரேந்திரமோடி பாராட்டியுள்ளார்.

இந்திய வீரர்களின் அளப்பரிய துணிச்சலையும், தேசபக்தியையும் பாராட்டியுள்ள பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் இத்தினத்தை ஒட்டி புதுதில்லியில் அமைந்துள்ள தேசிய போர் நினைவு சின்னத்தில் அஞ்சலி செலுத்தினார்.

முப்படைகளின் தலைவர் திரு.அனில் சவ்ஹான்,
ராணுவ தலைவர் திரு.உபேந்திரா திவேதி
விமானபடை தலைவர் ஏர்.சீப் மார்ஷல் ஏ.பி.சிங் உள்ளிட்டோர் இன்னுயிர் ஈந்த வீரர்களின் நினைவாக வீர அஞ்சலி செலுத்தினர்.

சென்னை காமராஜர் சாலையில் அமைந்துள்ள வெற்றி போர் நினைவு சின்னத்தில் தக்ஷின்பாரத் இந்திய பாதுகாப்பு படையின் தலைவர் மேஜர் ஜென்ரல் ஆர்.எம்.ஸ்ரீனிவாஸ் மற்றும் ஊழியர்கள் மலர்வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

***********

மறைவு

அமெரிக்காவில் உடல் நலக் குறைவால் காலமான பிரபல தபேலா இசைக்கலைஞர் ஜாஹீர் உசேனுக்கு குடியரசுதலைவர், குடியரசு துணை தலைவர் பிரதமர் உள்ளிட்டோர் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

ஜாஹீர் உசேனின் படைப்பாற்றல் திறன், புதுமை கண்டறியும் திறன் ஆகியவற்றை பாராட்டியுள்ள தலைவர்கள் அவரது மறைவு இசை உலகிற்கு பேரிழப்பாகும் என்று கூறியுள்ளனர்.

பாரம்பரிய இசை உலகில் புரட்சியை ஏற்படுத்தி தமது திறன்மிகு கலையால் உலகளாவிய கோடிக்கணக்கான மக்களை ஈர்த்ததாக புகழாரம் சூட்டியுள்ளனர்.

***********

முதலமைச்சர்

ராணிப்பேட்டை மாவட்டம் சிப்காட் பணப்பாக்கம் தொழிற்பூங்காவில் தைவான் நாட்டின் ஹோங்.்ப்பு நிறுவனத்தின் ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதலீட்டிலான காலணி உற்பத்தி தொழிற்சாலைக்கு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் காணொலி மூலம் இன்று அடிக்கல் நாட்டினார்.

இத்தொழிற்சாலையின் மூலம் 25 ஆயிரம் பேருக்கு புதிய வேலை வாய்ப்புகள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தொழிற்பூங்காவில் இத்தொழிற்சாலைக்கு 200 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தமிழக அரசுடன் மேற்கொள்ளப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்த தொழிற்சாலை ராணிப்பேட்டையில் அமைய உள்ளது.

***********

மின் கட்டணம்
வீடுகளுக்கான மின் கட்டணம் தமிழ்நாட்டில் மிககுறைந்த அளவில் வசூலிக்கப்படுவதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.
சென்னையில் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மின் கட்டணங்கள் மற்றும் மின்வரி சராசரி குறித்த நிபுணரின் புள்ளி விவரங்களை மேற்கோள்காட்டி இது தெரிவிக்கப்பட்டுள்ளது.
2023 ஆம் ஆண்டு மார்ச் மாத கட்டண விகிதங்களின்படி வீடுகளில் 100 யூனிட் மின்சாரத்திற்கு மேல் அனைத்துவரிகள் உட்பட தமிழகத்தில் மிக மிக குறைவாக 113 ரூபாய் வசூலிக்கப்படுவதாகவும், 100 யூனிட் வரை இலவச மின்சாரம் வழங்கப்படுவதாகவும், அந்த அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.
ராஜஸ்தான் உத்திபிரதேசம், சட்டிஸ்கட் ஒடிசா, மேற்குவங்கம் கர்நாடகம் உள்ளிட்ட 9 மாநில மின் கட்டணங்களை ஒப்பிட்டு மாநில அரசு இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது.

***********

அமைச்சர்கள்
காஞ்சிபுரம் மாவட்டம் செம்பரம்பாக்கம் ஏரியை மாநில அமைச்சர்கள் திரு.துரைமுருகன் மற்றும் திரு.தா.மோ.அன்பரசன் இன்று ஆய்வு செய்தனர்.
24 அடி உயரம் கொண்ட செம்பரம்பாக்கம் ஏரியின் நீர்மட்டம் 21 அடியை எட்டியுள்ள நிலையில் நீர்வரத்து ஆயிரத்து 700 கன அடியாக குறைந்துள்ளது.
முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக ஏரியிலிருந்து மூவாயிரம் கன அடி உபரி நீர் வெளியேற்றப்படுகிறது.

***********

கோமாரி
தமிழகத்தில் திருச்சி, பெரம்பலூர், ராணிப்பேட்டை, சிவகங்கை மாவட்டங்களில் கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்பூசி முகாம் இன்று தொடங்கி 21 நாட்கள் நடைபெறவுள்ளது.
நாமக்கல் மாவட்டத்தில் மோகனூர் ஊராட்சி ஒன்றியம் அனியாபுரம் புதூர் கிராமத்தில் 6ஆவது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி பணிகள் இன்று தொடங்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
வாய்ஸ்

***********

மீனவர்கள்
ராமேஸ்வரம் கடல் பகுதியில் பலத்த வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் இப்பகுதி மீனவர்களுக்கு மீன்பிடி அனுமதி சீட்டுகளை மீன்வளத்துறை இன்று வழங்கவில்லை என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.
வாய்ஸ்

***********

குகேஷ்
சிங்கப்பூரில் இருந்து சென்னை திரும்பிய உலக செஸ் சேம்பியன் குகேஷிற்கு விமான நிலையத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் இன்று உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.
தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத்துறை சார்பில் குகேஷிற்கு பாராட்டு விழா நடைபெற உள்ளதாக விளையாட்டு ஆணையம் தெரிவித்துள்ளது.

***********

**ney;iy**
நெல்லை மாவட்டம், மேற்குதொடர்ச்சி மலைப்பகுதிகளில் அண்மை கனமழையால் பாபநாசம் அணை 100 அடியை எட்டியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

வானிலை

தென்கிழக்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த இரண்டு நாட்களில் மேலும் வலுப்பெற்று மேற்கு, வடமேற்கு திசையில் தமிழக கடற்கரையை நோக்கி நகரக்கூடும் என்று இம்மையம் கூறியுள்ளது.

இதன்காரணமாக செங்கல்பட்டு விழுப்புரம் கடலூர் மயிலாடுதுறை மாவட்டங்களில் நாளை கன, மிக கனமழையும்,

சென்னை திருவள்ளூர் காஞ்சிபுரம் திருவாரூர் நாகை மாவட்டங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

வாய்ஸ்

***********

கோவில்

மார்கழி மாத பிறப்பை ஒட்டி தமிழகத்தில் உள்ள திருக்கோவில்களில் இன்று அதிகாலையிலேயே நடை திறக்கப்பட்டு சிறப்பு அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்றன.

ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோவிலில் தங்க இழைகளால் நெய்யப்பட்ட 30 திருப்பாவைகள் அடங்கிய புடவை ஸ்ரீஆண்டாளுக்கு சாற்றப்பட்டு சிறப்பு பூஜை நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

***********

கிரிக்கெட்

பிரிஸ்பேனில் ஆஸ்திரேலியாவிற்கு எதிரான பார்டர் கவாஸ்கர் கோப்பை, 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 3-ம் நாள் ஆட்ட நேர இறுதியில் இந்தியா தனது முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் இழப்பிற்கு 51 ரன் எடுத்திருந்தது.

வெளிச்சம் இன்மையால் 3ஆம் நாள் ஆட்டம் முன்கூட்டியே முடிவடைந்தது.

முன்னதாக 7 விக்கெட் இழப்பிற்கு 405 ரன் என்ற நேற்றைய ஸ்கோருடன் இன்று ஆட்டத்தை தொடர்ந்த ஆஸ்திரேலியா தனது முதல் இன்னிங்சில் 445 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

***********

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

***********